இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு, “உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும் அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப்போல் உங்களைச் சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள். மண்ணுலகு எங்கும் குடியிருக்கும் எல்லார்மீதும் அந்நாள் வந்தே தீரும். ஆகையால் நிகழப்போகும் அனைத்திலிருந்தும் தப்புவதற்கும் மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்” என்றார்.



# திருத்தந்தை வழங்கிய எட்டாம் ஆண்டு உலக வறியோர் தின மறையுரை

இயேசுவின் சீடர்களாகிய நாம் தூய ஆவியின் வழியாக இயேசு தரும் இந்த நம்பிக்கையை உலகில் விதைக்க முடியும் என்றும், நீதி மற்றும் ஒற்றுமையின் விளக்குகளை நாம்தான் ஏற்ற வேண்டும் நம்மால் தான் ஏற்ற முடியும், இறைவனின் அருள் நம்மை ஒளிவீசச் செய்கின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நவம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் நடைபெற்ற எட்டாம் ஆண்டு அகில உலக வறியோர் தின திருப்பலியில் வழங்கிய மறையுரையின்போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நமது இதயத்தை எப்போதும் நிறைத் திருக்கும் வேதனை மற்றும் நம்பிக்கை என்னும் இரண்டு எதார்த்தங்களை பற்றி சிந்திக்க அழைப்புவிடுத்தார்.

இருள் சூழ்ந்த நேரத்திலும், பாழடைந்து இடிந்து விழுவது போல் தோன்றும் சூழலிலும் கடவுள் நம்மில் வருகிறார், நம் அருகில் வருகின்றார், நம்மை மீட்க ஒன்றிணைக்கின்றார் என்றும், இதயம் மற்றும் காலத்தின் கடினமான சூழலிலும் கூட அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களாக சுடர்விட வேண்டும் என இயேசு நம்மை அழைக்கின்றார் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

“அந்நாள்களில் அவ்வேதனைகளுக்குப் பிறகு கதிரவன் இருண்டுவிடும்; நிலா ஒளிகொடாது. விண்மீன்கள் வானத்திலிருந்து விழுந்த வண்ணமிருக்கும்; வான்வெளிக் கோள்கள் அதிரும்” என்ற நற்செய்தி வரிகளை மேற்கோள்காட்டிய திருத்தந்தை அவர்கள்,

வேதனை என்னும் நமது காலத்தின் பரவலான உணர்வு, சமூகத் தொடர்பு பிரச்சனைகள், காயங்களினால், உலகை மேலும் பாதுகாப்பற்றதாகவும் எதிர் காலத்தை மேலும் நிச்சயமற்றதாகவும் ஆக்குகிறது என்று எடுத்துரைத்தார்.

போரின் கொடுமையால் இறப்பு, பசி மற்றும் பஞ்சத்தினால் எத்தனையோ சகோதர சகோதரிகள் ஒடுக்கப்படும் நிலையில் சூரியன் இருண்டு விடுவதையும், நிலா ஒளிதராமல் இருப்பதையும் காண்கின்றோம் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், அச்சூழலிலும் கடவுள் இருப்பதைப் பார்க்கத் தவறிவிடுகின்றோம் என்று கூறினார்.

உலகின் ஆபத்தான நிலையிலும் வேதனையிலும் கூட, கடவுளின் அன்பின் உடனிருப்பு நம்மை நெருங்கி வருகிறது, நம்மைக் கைவிடாது, நம் மீட்பிற்காக செயல்படுகிறது என்றும், அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள் மீது வருவதைக் காண்பார்கள். அவர் வானதூதரை அனுப்பி, அவர்கள் மண்ணுலகில் ஒரு கோடியிலிருந்து விண்ணுலகில் மறுகோடி வரை நான்கு திசைகளிலிருந்தும் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார் என்ற நற்செய்தி வரிகளையும் எடுத்துரைத்தார்.

கல்வாரியில், இயேசுவின் இறப்பின்போது சூரியன் இருளடையும் மற்றும் உலகம் முழுவதும் இருள் இறங்கும்; ஆனால் அந்த நேரத்தில் உயிர்த்த மானிடமகன் மேகங்களின் மீது வருவார், அவருடைய உயிர்த்தெழுதலின் ஆற்றல் மரணத்தின் சங்கிலிகளை உடைக்கும், ஒரு புதிய உலகம் பிறக்கும் என்ற இறைவார்த்தைகள் வழியாக நமக்கு நம்பிக்கையை அளிக்கின்றார் என்றும் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை.

இரக்கம் மற்றும் பிறரன்புச் செயல்களால் இணைந்த நமது வாழ்வுதான் இறைவனது உடனிருப்பின் அடையாளமாக மாறுகின்றது என்றும், துன்புறும் ஏழைகளின் காயங்களை ஆற்றவும், அவர்களின் நிலையை மாற்றவும் எப்போதும் அவர்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

-மெரினா ராஜ் (வத்திக்கான்)

# குழந்தைகளின் நலன்களுக்கு திருஅவை அதிகாரமுடன் பேசுகிறது!

கிறிஸ்துவின் திரு இரத்தத்தால் குழந்தைகள் மீட்கப்பட்டு, அவருடைய அருளால் குழந்தைகளாகவும், கடவுளின் நண்பர்களாகவும், முடிவற்ற மகிமையின் வழித்தோன்றல்களாகவும் மாறுகிறார்கள் என்பதை கிறிஸ்தவ வெளிப்பாடு திருஅவைக்கு உணர்த்துகிறது என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உலக குழந்தைகள் தினத்திற்காகப் பாப்பிறை அமைப்பு நிறுவப்பட்டதற்கான தான் கையொப்பமிட்டுள்ள ஆணை (CHIROGRAPH) ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ள திருத்தந்தை நற்செய்திகளில் காட்டப்படும் குழந்தைகள் மீதான இயேசுவின் அணுகுமுறைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார் திருத்தந்தை.

குழந்தைகள் பொதுவாக எதிர்காலத்தில் குடும்பம், சமூகம், திருஅவை அல்லது தங்கள் நாடுகளுக்கு என்ன கொடுக்க முடியும் என்பதைக் கருத்தில் கொள்வது மட்டுமல்ல, அவர்கள் வாழும் பருவத்தில் முதன்மையானவர்கள், முக்கியமானவர்கள் மற்றும் மதிப்புமிக்கவர்கள் என்பதும் உணர்ந்துகொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குடும்பம், திருஅவை, அரசு ஆகியவை குழந்தைகளுக்கானது, குழந்தைகள் நிறுவனங்களுக்காக அல்ல என்றும், ஏற்கனவே குழந்தையாக இருந்த மனிதன், பிரிக்க முடியாத, மீற முடியாத மற்றும் உலகளாவிய உரிமைகளுக்கு உட்பட்டவன் என்பதையும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

திருஅவை கடவுளின் பெயரால் குழந்தைகளின் அடிப்படை உரிமைகளுக்காக அதிகாரபூர்வமாகக் குரல் கொடுக்கிறது என்றும், குழந்தைகளின் உயிரையும் மாண்பையும் நசுக்குகின்ற வன்முறை மற்றும் ஆபத்துக்களை எதிர்கொண்டு, இன்னும் கூடுதலான வலிமையுடன் அவர்களின் தேவைகளை எல்லா நாடுககளுக்கும் எடுத்துச் செல்பவளாகத் திருஅவைத் தன்னை மாற்றிக் கொள்கிறது என்றும் விவரித்துள்ளார்.

குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது உண்மையில் பெற்றோர்கள், அரசு மற்றும் கற்றுக்கொடுக்கும் ஒரு சமூகமாகத் திருஅவையின் மிகப்பெரிய பொறுப்பு என்று வலியுறுத்திக் கூறியுள்ள திருத்தந்தை, குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது திருஅவையின் கடமை மற்றும் அறத்தின் முதல் வடிவம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

இந்த நாள் உலகளாவிய திருஅவையின் அளவிலும், குறிப்பிட்ட தலத்திருஅவைகளிலும் அவற்றின் மாநில மற்றும் தேசிய குழுக்களின் அளவிலும் கொண்டாடப்பட வேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறியுள்ள திருத்தந்தை, உள்ளூர் அமைப்புக் குழுக்களை அமைக்கும் மாநில மற்றும் தேசிய ஆயர் பேரவைகளுக்கு உலக குழந்தைகள் தினத்தை தயாரிக்கும் பணியை தான் ஒப்படைப்பதாகவும் உரைத்துள்ளார்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம்— வத்திக்கான்*

# கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தில் மறைக்கல்வி ஆசிரியர்கள் சான்றிதழ் பெற்றனர்

கோலாலம்பூர் உயர் மறைமாவட்ட மேய்ப்பு பணி கழகத்தின் ஏற்பாட்டில் அடிப்படை இறையியல் இறுதிப் பயிற்சியானது கடந்த நவம்பர் 16 மற்றும் 17 ஆகிய திகதிகளில் சிறப்பாக நடந்து முடிந்தது. அருட் சகோதரி ரீத்தா அவர்கள் சமூக ஆன்மீகம் எனும் தலைப்பில் வகுப்பை வழி நட்டத்தினார். நாம் அன்பாலும், தியாகத்தாலும் செய்யும் ஒவ்வொரு செயலும் பணியும் ஆன்மிகம் என்பதை தெரிந்து கொண்டோம். ஒரு தனிநபர் தன்னை சுற்றி இருப்பவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும், பலவீனமான ஆன்மாக்களுக்கு ஆறுதலாக இருப்பதும் கூட ஆன்மீகம்தான் என்றுணர்த்தினார்.

திரு அவையில் பிரிவினையை தவிர்த்து, மற்றவர்களின் குறைகளை உணர்ந்து, தெரிந்து அதை நிவர்த்தி செய்வதும் சமூக ஆன்மீகம் ஆகும். ஆன்மீகம் என்பது



*ஓராண்டு மறைக்கல்வி இறையியல் பயிற்சியில் பங்கேற்று சான்றிதழ் பெற்றோர்*

எங்கோ உள்ளது அல்ல. மாறாக நம் ஒவ்வொரு நற்செயலின் வெளிப்பாடு தான் என்பதை நன்கு உணர்ந்து கொண்டோம். முதல் நாள் இரவு, நற்கருணை ஆண்டவரோடு ஒரு மணி நேரம் ஒன்றிணைந்து, பாடல் பாடி, தியானம் செய்து ஆண்டவர் நமக்கு செய்த அனைத்து நன்மைகளுக்கும் மனதார நன்றி கூறினோம்.

*தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்*

# கிள்ளான், புனித லூர்து அன்னை பங்கில் விவிலியக் கண்காட்சி

**கிள்ளான்:** கடந்த அக்டோபர் 27-ம் திகதி, இங்குள்ள புனித லூர்து அன்னை பங்கின் மறைக்கல்வி பணிக்குழு எற்பாட்டில், திருவிவிலியக் கண்காட்சி விழா சிறப்பாக நடைபெற்றது. **'என் வார்த்தையில் நிலைத்திருங்கள்'** (யோவான் 8:31) எனும் திருத்தந்தையின் கருத்தையொட்டி, இவ்விழா காலை 8 மணி தொடங்கி பிறபகல் 2 மணி வரை லூர்து மண்டபத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியைக் காண பங்கு மக்கள் ஆர்வத்துடனும் ஆவலுடனும் வருகைத் தந்தனர். பாலர் வகுப்பு முதல் படிவம் 4 வரையிலான மாணவர்கள் இதில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகப் படைப்பு, ஆதாம் ஏவாள் கதை, நோவாவின் பெட்டகம், விடுதலைப்பயண நிகழ்வுகள், மோசேயின் பத்து கட்டளைகள், பாலைநிலத்தல் இயேசு சோதிக்கப்பட்டது, தொலைந்து போன மகனின் உவமை, சக்கேயுவின் கதை, புனிதர்களின் அர்ப்பண வாழ்வு, தூய ஆவியின் கனிகள் போன்றவை மாணவர்களின் அரிய படைப்பாகக் காட்சியகத்தை அலங்கரித்தன. இவற்றோடு விவிலியப் புதிர் போட்டியும் இடம் பெற்றது.







அன்று மாணவர்கின கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட பெரிய செபமாலை ஒன்று அனைவரையும் கவர்ந்தது. அத்துடன் கண்காட்சிக்கு வருகைத்தந்தோருக்கு, மாணவர்களே விளக்கமளித்தனர். இந்நிகழ்வின் வழி மாணவர்கள் விவலியத்திலும் மறைக்கல்வியிலும் பெற்ற ஞான அறிவை தெளிவாக வெளிப்படுத்தினர் என்றால் மிகையாகாது. இந்நகழ்ச்சி மிகவும் சிறப்பாக அமைவதற்கு உறுதுணையாக இருந்த பங்குத்தந்தை கிரகோரி சான், துணை பங்குத்தந்தை ஞான செல்வம் மற்றும் மறைக்கல்வி ஆசிரயர்களுக்கும் நன்றி மாலை சூட்டப்பட்டது.

மறைக்கல்வியை ஏட்டில் படிப்பதோடு, இவ்வாறு செய்முறையில் கற்பது மிகவும் பலனளிக்கும் என்பது அன்று உணரப்பட்டது. திருஅவையில் எதிர்நோக்குக் கொண்ட திருப்பயணிகளாக விளங்கும் மாணவர்கள் எழுச்சிப்பெற்று விளங்க இக்கண்காட்சி தூண்டுகோளாக விளங்கிற்று.

-திரேசா தாஸ், கிள்ளான்

### திருதந்தையின் மன்றாட்டு
**டிசம்பர் 2024**

**எதிர்நோக்கின் திருப்பயணிகளுக்காக**

இந்த யூபிலி ஆண்டில், நம் நம்பிக்கையில் நம்மை திடப்படுத்தவும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நம் வாழ்வின் மத்தியில் அடையாளம் காணவும், கிறிஸ்தவ நம்பிக்கையின் திருப்பயணிகளாக நம்மை மாற்றவும் மன்றாடுவோமாக.



# திருவருகைக்காலம் பற்றி இறைமக்கள் அறிந்துக் கொள்ள வேண்டிய பத்து படிப்பினைகள்
## (சென்ற வாரத் தொடர்ச்சி)

### 4. திருவருகைக் காலம் எப்போது துவங்கி எப்போது முடிவடைகிறது?

வழிபாட்டு பொது விதிமுறை (40)ன் படி திருவருகைக் காலம் நவம்பர் 30ம் நாளில் அல்லது அதற்கு அண்மையில் வரும் ஞாயிற்றுக்கிழமை, முதல் மாலைத் திருப்புகழோடு தொடங்கி, கிறிஸ்து பிறப்பு விழாவின் முதல் மாலைத் திருப்புகழுக்கு (டிசம்பர் 24)க்கு முன் முடிவடையும்.

### 5. திருவருகைக் கால ஞாயிற்றுக்கிழமைகளில் முக்கியத்துவம் என்ன?

திருவழிபாட்டு பொது விதிமுறை (41)ன் படி திருவருகைக் காலத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் திருவருகைக் கால 1, 2, 3, 4 - ஆம் ஞாயிறு எனப்படும். திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறுக்கு "மகிழும் ஞாயிறு" என்ற சிறப்பு பெயர் உண்டு. விதிமுறை 5ல் எல்லா ஞாயிற்றுக்கிழமையும் தனி முக்கியத்துவம் வாய்ந்தது எனவும், எனவே அது பெருவிழாக்களுக்கும் கிறிஸ்துவின் விழாக்களுக்கும் மட்டுமே இடம் தரும் என்கிறது: ஆனால் திருவருகைக்கால, தவக்கால, பாஸ்கா கால ஞாயிற்றுக் கிழமைகள் ஆண்டவருடைய விழாக் களுக்கும், மற்ற எவ்வகைப் பெருவிழாக் களுக்கும் மேலான இடம் பெறும்.

### 6. திருவருகைக் கால வார நாட்களில் என்ன நிகழ்கின்றது?

திருவருகைக் கால வார நாட்களில் மக்களுடனான திருப்பலியின்போது தினமும் மறையுரை பரிந்துரைக்கப்படுகின்றது. ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் கடன் திருநாள்களில் மக்கள் பங்கேற்கும் எல்லாத் திருப்பலிகளிலும் மறையுரை நிகழ்த்துவது கட்டாயம் ஆகும். (GIRM 66). விதிமுறை 42 டிசம்பர் 17 முதல் 24 உட்பட வரும் வார நாட்கள் கிறிஸ்து பிறப்புக்கு நேரடி முன்னேற்பாடாக அமைக்கப்பட்டுள்ளன என்பதின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

### 7. திருவருகைக் கால ஆலய அலங்கரிப்பு எவ்வாறு நிகழ்கிறது?

பீடத்தை அணி செய்வது மிதமான அளவோடு இருக்க வேண்டும். திருவருகைக் காலத்தில் அக்காலத்தின் தன்மைக்கேற்ப பீடத்தை மிதமான அளவில் மலர்களால் அணிசெய்தல் வேண்டும். அது ஆண்டவருடைய பிறப்பின் நிறை மகிழ்வை முன்னறிவிப்பதாய் அமைதல் கூடாது. மலர்களால் அணி செய்வது எப்பொழுதும் அளவுக்கு மிகாமல் இருத்தல் நல்லது. மலர்கள் பீட மேசையின் மீது வைக்கப்படுவதைவிட பீடத்தைச் சுற்றி வைக்கப்பட வேண்டும். (GRM 305)

### 8. திருவருகைக் காலம் இசையின் பங்கு என்ன?

திருவருகைக் காலத்தில் அதன் தன்மைக்கு ஏற்றவாறு, ஆர்கன் மற்றும் பிற இசைக் கருவிகளையும் மிதமாக, ஆண்டவருடைய பிறப்பின் நிறை மகிழ்வை முன்னறிவிக்காத அளவில் மீட்டுதல் வேண்டும். (GIRM 313)

முதல் பக்கத் தொடர்ச்சி.

இரண்டாவது நாள் பயிற்சி காலை புகழ்ச்சியோடு தொடங்கியது. டாக்டர் ஸ்டீபன் கிறிஸ்துவின் ஆன்மீகத்தை பற்றி பயிற்சி கொடுத்தார். ஆன்மீகம் ஒரு வழி என்றும், அதன் முடிவு ஆண்டவர் தான் என்பதை தெளிவாக புரிந்து கொண்டோம். அருட்பொழிவு செய்யப்பட்டவர்களின் ஆன்மீகமும், பொது நிலையினரின் ஆன்மீகமும் வேறுபட்டதே தவிர, தரத்தின் சிறப்பில் எந்த ஒரு ஏற்றத்தாழ்வும் இல்லை என்பதை தெரிந்து கொண்டோம்.

கிறிஸ்துவ ஆன்மீகம் ஒவ்வொரு திருமுழுக்கு பெற்ற தனி நபர்களில் இருந்து தொடங்குகிறது. திருமுழுக்கே ஆன்மீகத்தின் அடிப்படை என்பது எடுத்துரைக்கப்பட்டது. திருமுழுக்கே அனைத்து அருட்சாதனங்களுக்கும் ஒரு திறவுகோல். திருமுழுக்கின் மூலம் பாவத்திலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைகளாக தெரிந்து எடுக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து பணி செய்ய அழைக்கப்படுகிறோம் என்பதை அவர் தெளிவுப்புத்தினார்.

இறுதியாக கிறிஸ்துவ ஆன்மிகம் என்பது, நமக்கு அனைத்து நன்மைகள் செய்யும் ஆண்டவருக்கு, நம்முடைய சொல், செயல், நடத்தைகளின் மூலம் நாம் செலுத்தும் நன்றியே என்பதை அறிந்துணர்ந்தோம்.

நிறைவாக ஒரே குழுமமாக செபமாலை ஒப்புக்கொடுத்து, பத்து மாத பயிற்சியின் மூலமாக பெற்ற நன்மைகளை, ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொண்டு, நற்சான்றிதழ்களையும் வெற்றிகரமாக பெற்றுக்கொண்டு மகிழ்வோடு வீடு திரும்பினோம்.

-ரெஜினா பரமன்

# தலை நிமிர்ந்து நிற்போம், வருவேன் என்றவர் வரவுள்ளார்!

இன்று நாம் திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறில் அடியெடுத்து வைக்கின்றோம். மேலும் புதிய திருவழிபாட்டு நாட்காட்டியையும் தொடங்குகின்றோம். ஒவ்வொரு திருவருகைக்காலமும் நமக்கு இறைமகன் இயேசுவின் பிறப்பை மட்டுமல்லாமல் அவரின் இரண்டாம் வருகையையும் மீண்டும் மீண்டும் நினைவூட்டும் காலம். இஸ்ராயேல் மக்கள் இருளின் பிடியில் இருந்தும் துன்பத்தில் இருந்தும் தங்களைக் காத்துக்கொள்ள மானிடமகனின் வருகைக்காக காத்திருந்தனர். இறைவாக்கினர்களும் அதை அறிவித்துக்கொன்டே இருந்தார்கள்.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எரேமியா இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் அளித்த வாக்குறுதி நிச்சயம் நிறைவேறும் என்று கூறி, அவர்களுக்கு தாவீதின் குலத்திலிருந்து மீட்பர் தோன்றுவார் என்று முன்னறிவிக்கிறார். ஆனால் இன்றைய உலகில் கிறிஸ்து பிறப்பு என்பது இன்னுமொரு விழாக் கொண்டாட்டமாகவும், களியாட்டமாகவும் மாறிக்கொண்டிருக்கிறது. உலகத்தின் மாயையில் நாம் சிக்கிக்கொள்ளாமல் இயேசுவின் வருகை நம்மை எவ்வாறு மாற்றுகிறது என்று சிந்திப்போம்.

கிறிஸ்துவர்களாகிய நமக்கு இவ்வுலகம் தற்காலிகமே. இரண்டாம் **வாசகத்தில்** குறிப்பிடுவதுபோல இயேசு மாட்சியோடு வரும்போது, நாம் அனைவரும் தூயோராய் இருக்குமாறு பவுல் அடிகள் நமக்கு அறிவுறுத்துகிறார். இன்றும் கூட உலகில் பல இடங்களில் இயற்கைப் பேரிடர்களோ அல்லது ஆலயங்களில் அற்புதங்களோ நடந்தாலும், அவையெல்லாம் நம் கவனத்தில் ஒரு சில நாட்களே. அதன்பின் நம்முடைய இயல்பு வாழ்க்கையை வாழத் தொடங்கிவிடுகின்றோம்.

நற்செய்தியில் இயேசு கூறுகிறார். குடிவெறி களியாட்டத்தில் சிக்கிக்கொள்ளாமல் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள். இன்றைய முதல் வாரம் நாம் “எதிர்நோக்கு” என்னும் மெழுகுத்திரியை ஏற்றுகிறோம். கிடைக்கும் என்று நம்பி காத்திருப்பதே எதிர்நோக்கு. நம்முடைய கண்கள் விண்ணக வாழ்வையும் எல்லையில்லா இன்பத்தையும் காண வேண்டுமென்று எதிர்நோக்கிக் காத்திருப்போம். இந்த ஆண்டையும் நாம் வீணே கழித்து விடாமல், நமக்கிருக்கும் வாழ்நாட்களை ஆண்டவருக்காக வாழ்வோம். அவருக்காக காத்திருப்போம். நம்முடைய உள்ளங்கள் எப்போதும் உரிமையாளரின் கரங்களை நோக்கிக் காத்திருக்கும் பணியாளரின் கண்களைப் போல ஆண்டவரையே நோக்கியிருக்கட்டும். நம்முடைய மன்னர் நம்மைச் சந்திக்க வருகிறார்.

திருவருகைக் காலத்தைத் தொடங்கியிருக்கின்ற இந்த வேளையில், நாம் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுகின்ற, மக்களுக்கு விடுதலையையும் பாதுகாப்பையும் தருகின்ற, மக்களிடத்தில் அன்பைப் பெருகச் செய்கின்ற மெசியாவின் வருகைக்காக நம்மையே நாம் தயார் செய்ய (விழித்திருந்து) செபிக்கின்ற மக்களாகவும், கடவுளுக் குரிய காரியங்களை நாடுகின்ற மக்களாகவும் மாறுவோம். அதன் வழியாக இறைவன் தருகின்ற முடிவில்லா வாழ்வைக் கொடையாகப் பெறுவோம். இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்.

*ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

### திருவருகைக்காலம் - முதல் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எரே 33: 14-16 |
| திரு.பாடல் | 25: 4-5, 8-9, 10-14 |
| 2-ம் வாசகம் | 1 தெச: 3:12,4-2 |
| நற்செய்தி | லூக்கா 21: 25-28, 34-36 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 1**